# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 196 | திங்கள் Monday | 12.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


## தமிழ்நாட்டில் ரூ.13,000 கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி

# “மதுரை, கோவை மெட்ரோ ரெயில் திட்டத்தை மறுபரிசீலனை செய்க..”

# பிரதமர் மோடியிடம் முதலமைச்சர் விஜய் கோரிக்கை





சென்னை:

சென்னை: சென்னை மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பைஏற்படுத்தி இருந்த வடபழனி – பூந்தமல்லி மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்தார். அப்போது முதல்வர் விஜய்யும் அவருடன் இருந்தார்.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் 118.1 கி.மீ. தொலைவுக்கு இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் முதற்கட்டமாக, வடபழனி முதல் பூந்தமல்லி வரையிலான 14.6 கி.மீ. வழித்தட மெட்ரோ பணிகள் முடிவடைந்து, ரயில்வே பாதுகாப்பு ஆணையத்தின் அனுமதியை பெற்றது.

இதனை தொடர்ந்து, இந்த மெட்ரோ ரயில் திட்டத்தை தொடங்கி வைப்பதற்கான தேதியை இறுதி செய்யுமாறு மத்திய அரசுக்கு மெட்ரோ நிறுவனம் கோரிக்கை விடுத்திருந்தது. எனினும், தமிழக சட்டமன்றத் தேர்தல், புதிய அரசு பதவியேற்பு உள்ளிட்ட காரணங்களால் இந்த வழித்தடத்தின் தொடக்க தேதி தொடர்ந்து தள்ளிப் போய் கொண்டே இருந்தது.

**மெட்ரோவில் பயணித்த மோடி–விஜய்**

இந்நிலையில், தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில், ரூ.13 ஆயிரம் கோடிக்கும் அதிகமான மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்காகப் பிரதமர் மோடி இன்று காலை தனி விமானம் மூலம் சென்னை வந்தடைந்தார்.

சென்னை விமான நிலையத்தில் அவரை முதலமைச்சர் விஜய் பூங்கொத்து வழங்கியும் சால்வை அணிவித்தும் வரவேற்றார். தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், மத்திய அமைச்சர் எல் முருகன், தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

தொடர்ந்து, பூந்தமல்லி –வடபழனி இடையிலான மெட்ரோ ரயில் சேவையைப் பிரதமர் மோடியும் முதலமைச்சர் விஜய்யும் கொடியசைத்துத் தொடங்கி வைத்தனர். பின்னர், பிரதமர் மோடி டிக்கெட் எடுத்துப் பயணம் மேற்கொண்டார். அவருடன்முதலமைச்சர் விஜய்யும்அதேமெட்ரோ ரயிலில் பயணித்தார்.

போரூர் புறவழிச் சாலை மெட்ரோ நிலையத்துக்கு வந்த பிரதமர் மோடி, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் வழித்தடங்கள் எவ்வாறு திட்டமிடப்பட்டன, கட்டமைப்புகள் எவ்வாறு உருவாக்கப்பட்டன, எதிர்காலத்தில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள் என்னென்ன என்பது குறித்துமெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரிகளிடம் விரிவாகக் கேட்டறிந்தார்.

இந்த வழித்தடம் பயன்பாட்டுக்கு வந்துள்ளதால், பூந்தமல்லி, போரூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சென்னையின் பிற பகுதிகளுக்குச் செல்லும் பயணிகள் சாலைப் போக்குவரத்தை மட்டுமே சார்ந்திருக்க வேண்டிய அவசியம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் பயண நேரத்தைக் குறைப்பதுடன், சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலையும் கட்டுப்படுத்த உதவும் எனக் கருதப்படுகிறது.

பூந்தமல்லி – வடபழனி வழித்தடத்தில் முதற்கட்டமாக 11 மெட்ரோ ரயில் நிலையங்கள் மூலம் சேவை வழங்கப்பட உள்ளது. அதன்படி, பூந்தமல்லி பைபாஸ், பூந்தமல்லி, முல்லைத் தோட்டம், கரையான்சாவடி, குமணன்சாவடி, காட்டுப்பாக்கம், ஐயப்பன்தாங்கல், தெள்ளியாரகரம், போரூர்பைபாஸ்,போரூர் சந்திப்பு, வடபழனி ஆகிய நிலையங்களில் ரயில்கள் நின்று செல்லும்.

அதே வேளையில், ஆலப்பாக்கம், காரம்பாக்கம், வளசரவாக்கம், ஆழ்வார் திருநகர், சாலிகிராமம் கிடங்கு, சாலிகிராமம் ஆகிய 6 நிலையங்களின் கட்டுமானப் பணிகள் முழுமையடையாததால், தற்போது அந்த நிலையங்களில் ரயில்கள் நிற்காது. கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த பின்னர் இந்த நிலையங்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களை மறுபரிசீலனை செய்யுமாறு பிரதமருக்கு முதல்வர் விஜய் கோரிக்கை வைத்துள்ளார். முன்னதாக, (அக்.11) காலை பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடியும், தமிழக முதல்வர் விஜய்யும் ஒன்றாக இணைந்து கொடியசைத்துத் தொடங்கி வைத்தனர். தொடர்ந்து மெட்ரோ ரயிலிலும் பயணித்தனர்.

பின்னர் கிண்டியில் சென்னை ஐஐடி வளாகத்தில் உள்ள ஜலகண்டேஸ்வரர் கோயிலில் பிரதமர், முதல்வர் தரிசனம் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து ஐஐடி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தேசிய கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டு நிகழ்ச்சி தொடங்கியது.

தொடர்ந்து பிரதமர் மோடி, ரூ.13 ஆயிரம் கோடிக்கும் அதிகமான மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். மேலும், நிறைவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைத்து, நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

பிரதம ரை வரவேற்று முதல்வர் விஜய் பேசுகையில், "பூந்தமல்லி – வடபழனி மெட்ரோ ரயில் சேவையை தொடங்கி வைத்த பிரதமர் மோடிக்கு நன்றி. தமிழ்நாடு பலதொன்மையான பண்பாட்டை உயிர்ப்புடன் வைத்திருக்கும் மாநிலம். அப்படிப்பட்ட தமிழ்நாட்டின் சார்ப்பில், தமிழக மக்களின் சார்பில் நான் பிரதமர் மோடியை வரவேற்கின்றேன்.

தமிழகத்தில் நமது அரசு அனைவருக்குமான அரசாக உள்ளது. கல்வி, வேளாண்மை என ஒட்டுமொத்த தமிழக நலனை இலக்காகக் கொண்டு அனைத்து தரப்பினருக்கான அரசாக நமது அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. 100 நாட்களுக்கும் மேல் ஆட்சியை நடத்தியிருக்கிறோம். ஊழலற்ற தமிழகத்தை உருவாக்க கடும் சிரத்தையுடன் செயல்பட்டு வருகிறோம்.

இந்தியாவின் முன்னேற்றத்திற்கு தமிழகம் என்றைக்கும் துணையாக நிற்கும். மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படும்போது அதன் பலன் நேரடியாக மக்களின் வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டும் என்பதே நமது அணுகுமுறை. சென்னையின் வளர்ச்சி மட்டுமல்லாமல் தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அதன் வளர்ச்சியைக் கொண்டு சேர்க்க வேண்டும். அதனால், சென்னை மெட்ரோ 3–ம் கட்ட திட்டம், ஓசூர் – பெங்களூரு திட்டம், கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை மறுபரிசீலனை செய்து ஒப்புதல் தர வேண்டுகிறேன்.

அதேபோல், சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடும் மொழியாக அறிவிக்க வேண்டும்." என்று வலியுறுத்தினார்.

# அக்டோபர் 15ல் தமிழகத்தில் 23 மாவட்டங்களில்

# மிதமான மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை:தமிழகத்தில் நீலகிரி, கோயம்புத்தூர்,திருநெல்வேலி உள்பட 23 மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் அக்.15–ம் தேதி மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மையத்தின் உயரதிகாரியும், விஞ்ஞானியுமான வி.ஆர். துரை ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கடந்த24மணிநேரத்தில், தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் 5 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டலசுழற்சிநிலவுகிறது. இதுதவிர, லட்சத்தீவு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் நீலகிரி, கோயம்புத்தூர்,ஈரோடு,திருப்பூர்,திண்டுக்கல்,தேனி, விருதுநகர், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 14 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் ஞாயிற்றுக்கிழமை (அக்.11) மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

அக்.12–ம் தேதி நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, மதுரை, சிவகங்கை, சேலம், திருப்பூர் ஆகிய 11 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

அக்.13–ம் தேதி தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அக்.14–ம் தேதி ராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, தேனி, கன்னியாகுமரி, சிவகங்கை,விருதுநகர், திண்டுக்கல், மதுரை ஆகிய 10 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை மழை பெய்யக்கூடும். வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

அக்.15–ம் தேதி நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், தேனி, மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி,கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கரூர், சேலம், நாமக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய 23 மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அக்16–ம் தேதி திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில்ஓரிரு இடங்களில் கன மழை பெய்யக்கூடும். அக்.17–ம் தேதி கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி, தேனி, மதுரை ஆகிய மாவட்டங்களில்ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. திங்கள்கிழமை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.






கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சுற்றித்திரிந்த தோல் நோய் பாதிக்கப்பட்ட தெரு நாய் பிடிக்கப்பட்டது. மாநகராட்சி நாய்பிடி பணியாளர்கள் பிடித்து சென்றனர்.

# ஸ்ரீவைகுண்டம் த.வெ.க. எம்எல்ஏ சரவணனுக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டும்; நாடார் இயக்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கை

தமிழக வெற்றிக் கழக ஆட்சியில் நாடார் சமுதாயத்திற்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்றும், ஸ்ரீவைகுண்டம் தொகுதி தமிழக வெற்றிக் கழக எம்எல்ஏ சரவணனுக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டும் என்றும் நாடார் இயக்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.



தூத்துக்குடியில் நாடார் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் வழக்கறிஞர் சிலுவை செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

நடைபெற்று முடிந்த இரண்டு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்களில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்றதற்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். சிறந்த நிர்வாகத்தை செயல்படுத்தி வரும் தமிழக முதல்வர் ஜோசப் விஜய்க்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

தூத்துக்குடி மாவட்டத்தில் நாடார் சமுதாய மக்களுக்கு உரிய அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. தமிழக மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் ஜாதி, மத வேறுபாடின்றி செயல்பட்டு வருகிறார். ஆனால், அவரைச் சுற்றியுள்ள ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த சிலர், அவரை ஜாதி அடிப்படையிலான வட்டத்திற்குள் கொண்டுவரும் வகையில் சமூக வலைதளங்களில் கருத்துகளை வெளியிட்டு வருவதாக குற்றம்சாட்டினர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு உரிய பதவிகள் வழங்கப்படவில்லை. இதனால், தங்களது குறைகளை அரசிடம் எடுத்துச் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். எனவே, விகிதாசார அடிப்படையில் நாடார் சமுதாயத்திற்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்குவதுடன், ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற தமிழக வெற்றிக் கழக எம்எல்ஏ சரவணனுக்கு அமைச்சர் பதவி வழங்க தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாடார் சமுதாயம் புறக்கணிக்கப்படுவதாக தொடர்ந்து உணரப்படும் நிலையில், தமிழக முதல்வர் உரிய நடவடிக்கைஎடுக்காவிட்டால், ஒட்டுமொத்த நாடார் சமுதாயமும் தமிழக வெற்றிக் கழக அரசுக்கு எதிராக திரும்பும் சூழல் ஏற்படும். எனவே, நாடார் இயக்கங்களின் பிரதிநிதிகளை தமிழக முதல்வர் உடனடியாக சந்தித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சான்றோர் வழக்கறிஞர் கட்டமைப்பு, தமிழ்நாடு S.P.சில்வை நாடார் தெரிவித்தார். இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர், சமத்துவ மக்கள் கழகம் M.அற்புதராஜ், பாண்டியனார் மக்கள் இயக்கம் M.M.டேவிட், நாடார் பேரவை மாவட்ட பிரதிநிதி T.சங்கர், நாடார் மகஜன சங்கம், மாவட்டத் தலைவர் A.பாலகிரு ஷ்ணன், நிறுவனர், பெருந்தலைவர்மக்கள்பேரவை S.P. மாரியப்பன், தமிழ்நாடு நாடார் சங்கம் மண்டல தலைவர் பொன்ராஜ், தமிழ்நாடு காமராஜர் பேரவை மாநில பொதுச் செயலாளர் K.K.S. அழகு மந்திரி, தமிழ்நாடு காமராசர் பேரவை தெற்கு மாவட்ட செயலாளர் ரமேஷ் பாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முத்துக்கிருஷ்ணபேரி இந்து உயர்நிலைப்பள்ளியில் தலைக்கு நூறு விதைப்பந்துகள் தயாரிப்பு திட்டம்



தென்காசி மாவட்டம் முத்துகிருஷ்ணபேரியில் செவ்வனே செயல்பட்டு வருவது இந்து உயர்நிலைப்பள்ளி. இங்கு தலைமையாசிரியர் பீட்டர் சாம் அல்போன்ஸ் தலைமையில் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியை அ.ஜீவரெஜினா முன்னிலையில் உலகைக் காக்கும் விதைப்பந்து தயாரிப்புத் திட்ட அமலாக்க கூட்டம் நடைபெற்றது. "விதைப்பந்து" என்னும் பசுமை விஷயத்தை தமிழக பள்ளிக் குழந்தைகளுக்கு கொண்டு சேர்க்க பாடுபட்டு வரும் சமூக நல ஆர்வலர் வெங்காடம்பட்டி பூ. திருமாறன் மாணவர்களுடையே பேசினார். 174 தொடக்கப்பள்ளிகுழந்தைகளும் 190 உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் இதில் உற்சாகமாக கலந்து கொண்டனர். பாரம்பரியமான இப்பள்ளி நிறுவப்பட்ட ஆண்டு 1929, க.பி. சண்முகம் அல்போன்ஸ் என்பவரால் துவக்கப்பட்டு தற்போது ச.அ. அந்தோணிசாமி என்பவரால் பள்ளி நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஒட்டுமொத்த பிள்ளைகளுக்கும் திருமாறன் விதை சேகரிப்பு, விதைப்பந்து தயாரிப்பு, விதைப்பந்தில் வைக்க தோதுவான விதைகள், அதன் விளைவுகள் குறித்து விளக்கினார். தலைக்கு நூறு விதைப்பந்துகள் தயாரிக்கலாம் என முடிவு செய்யப்பட்டது. ஆசிரியர்கள் தேன்மொழி, அன்னாள், செல்வி, சிவசங்கரி, விஜி, ஞானசுந்தரி, அருள் நிர்மலா, செசிலியா, சிப்ரியா, சுரேஷ் பிரபாகர், ரெஜினா, மகேஸ்வரி ஏற்பாடுகள் செய்திருந்தனர். விதைப்பெட்டி வகுப்பு வாரியாக பள்ளியில் வைக்கப்பட்டது. வேம்பு, புளி, பழ மர விதைகளை மாணவர்கள் குவித்து வருகின்றனர். ரத்ததானக்கழக மணியன், அம்பை காந்தி கலந்து கொண்டனர். தலைமை ஆசிரியர் பீட்டர் சாம்க்கு பசுமைப் பணிகளுக்காக பசுமைப் பங்காளி விருதினை திருமாறன் வழங்கினார்.

# தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார் ஏ.கே.எஸ். வைரவேல் விரைவில் 1,000 பேருடன் களம் காண முடிவு

ஈரோடு மாநகர் பகுதியில் இளைஞர்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க நிர்வாகியாகப்பல ஆண்டுகள் தீவிர அரசியல் பிரமுகராக குறிப்பாக அதிமுகவில் பல்வேறு பொறுப்புகளில் இருந்த மார்க்கெட் ஏ.கே.எஸ். வைரவேல், தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழக வெற்றிக் கழகத்தில் முறைப்படி இணைந்தார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், தவெக-வின் மக்கள் நலக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு இந்த முடிவை எடுத்துள்ளதாகவும், கட்சியின் வளர்ச்சிக்காகவும் அதன் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கவும் முழு அர்ப்பணிப்புடன் தீவிர களப்பணியாற்ற உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், வரும் நாட்களில் தனது தலைமையில் சுமார் ஆயிரம் பேரை தமிழக வெற்றிக் கழகத்தில் இணைக்க உள்ளதாக உறுதியளித்த நிலையில், இந்நிகழ்வின்போது கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் பலர் உடனிருந்து அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.



# ஈரோட்டில் தலைமலை தொட்டபுரம் ஆஞ்சநேயர் கோவில் அறக்கட்டளை சார்பில் 22வது மாதமாக 1500 பேருக்கு அன்னதானம்



ஈரோடு மாவட்டம் தாளவாடி அருகே உள்ள தலைமலை தொட்டபுரம் பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற 46 அடி உயர ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் அறக்கட்டளை மற்றும் ஈரோடு தினசரி காய்கறி சந்தை நண்பர்கள் இணைந்து மாதந்தோறும் அமாவாசை நாளில் ஏழை எளிய மக்களுக்கு தொடர்ச்சியாக அன்னதானம் வழங்கி வருகின்றனர். அந்த வகையில் 22-வது மாதமாக புரட்டாசி மாத மஹாளய அமாவாசையை முன்னிட்டு மாபெரும் அன்னதான நிகழ்வு வெகுசிறப்பாக நடைபெற்றது. ஈரோடு நேதாஜி தினசரி காய்கறி மார்க்கெட் பகுதியில் நடைபெற்ற இந்நிகழ்வை பூபதி ஆயில் மில் உரிமையாளர் ஆறுமுகம் தலைமை தாங்கி பொதுமக்களுக்கு உணவுகளை வழங்கித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அம்மன் கேலண்டரிங் மில் உரிமையாளர் சுப்ரமணியம், லக்காபுரம் பவர் கட் உரிமையாளர் பாலாஜி, முருகன் டெக்ஸ் கொத்துக்காரர் சண்முகசுந்தரம், வழக்கறிஞர் நவமணி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர். ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் அறங்காவலர்கள் முன்னின்று ஒருங்கிணைத்த இந்த அன்னதான நிகழ்வில், ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட் வளாகத்தில் 1500-க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு சுவையான நான்கு வகை சாதங்களுடன் அன்னதானம் பரிமாறப்பட்டது. மேலும் ஈரோடு கொங்கலம்மன் கோவில் வீதி மற்றும் தலைமலை தொட்டபுரம் ஆஞ்சநேயர் கோவில் வளாகம் ஆகிய இடங்களிலும் பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் விரிவான முறையில் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் திரளான பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# அரசியல் சாக்கடையை நல்ல நீராக மாற்றுவதே நோக்கம் அரசியல் ஆலோசகர் ஆய்வாளர் சிவகுமார் பேட்டி



தூத்துக்குடியைச் சேர்ந்த 30 ஆண்டுகள் அரசுத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவர், கடந்த 10 ஆண்டுகளாக அரசியல், சட்ட ஆலோசகராக ஆய்வு மேற்கொண்டு, தனது ஆய்வுகளை புத்தகமாக வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளாக நீதிமன்றங்களில் நிலுவையில் இருந்த போக்குவரத்துத் துறை தொழிலாளர்களின் பஞ்சப்படி (DA) தொடர்பான பிரச்னைக்கு 100 நாட்களுக்குள் தீர்வு காணப்பட்டதாகவும், இதன் மூலம் லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டு, இதற்காக முதலமைச்சருக்கு பாராட்டு தெரிவித்துள்ளார். அரசியலில் லஞ்ச லாவண்யங்களை ஒழித்து, நேர்மையான நிர்வாகத்தை உருவாக்குவதே தனது நோக்கம் என்று தெரிவித்த அவர், அரசியல் சாக்கடையை நல்லநீராக மாற்றுவதற்கான முயற்சியில் தொடர்ந்து ஆய்வு செய்து வருவதாகக் கூறினார்.

இதுகுறித்து அவர் பேசுகையில், "நானே முதன்முதலில் அரசியலை ஒரு சாக்கடை என்றுதான் நினைத்தேன். ஆனால், அந்தச் சாக்கடையை ஏன் நல்ல நீராக மாற்றக் கூடாது? நம்மால் மாற்ற முடியாதா? என்று யோசித்து, அதுகுறித்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன். எப்படியாவது அரசியலை நல்ல நீராக மாற்றுவேன்" என்று உறுதிபடத் தெரிவித்தார்.

படித்தவர்களும் அறிவுசார்ந்த மக்களும் அரசியலுக்கு முன்னோடிகளாக வர வேண்டும் என்பது தனது நீண்டகால ஆசை என்றும் அவர் குறிப்பிட்டார். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களில் பலருக்கு அடிப்படை நிர்வாக அறிவு குறைவாக இருப்பதாகக் கூறிய அவர், இதற்குத் தீர்வு காண வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார். மக்கள் பிரதிநிதிகளுக்குச் சென்னையில் இலவசமாக அடிப்படை நிர்வாகப் பயிற்சி முகாம்களை நடத்த முதல்வர் அனுமதி அளித்தால், இதற்காக சென்னை நகரில் அரசு இடம் ஒதுக்கீடு செய்து வழங்கினால், மக்கள் பிரதிநிதிகளுக்கு நிர்வாகத்திறனை மேம்படுத்தி, இலவசமாக பயிற்சி அளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், கடந்த காலங்களில் பட்டா பெறுவதற்குப் புரோக்கர்களிடம் பணம் கொடுக்க வேண்டிய நிலை இருந்ததாகவும், தற்போது லஞ்சமின்றி எளிதாகப் பட்டா பெறும் சூழல் உருவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். அதேபோல், போக்குவரத்துத் தொழிலாளர்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கும் தற்போதைய அரசு தீர்வு கண்டுள்ளதாகக் குறிப்பிட்டார். நேர்மையான நிர்வாகம், மக்கள் பிரதிநிதிகளுக்கான பயிற்சி, லஞ்ச ஒழிப்பு ஆகியவற்றின் மூலம் அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்என்பதே அவரது பேச்சின் முக்கிய நோக்கமாக அமைந்தது என்று அரசியல் ஆலோசகர் ஆய்வாளர் சிவகுமார் தெரிவித்தார்.

# "பூந்தமல்லி வடபழனி மெட்ரோ ரயில் திட்டம் அதிமுக ஆட்சியில் போடப்பட்ட விதை" எடப்பாடி பழனிசாமி பெருமிதம்

சென்னை: "அதிமுக ஆட்சியில் நாம் விதைத்த விதைகளான பூந்தமல்லி - வடபழனி வழித்தட மெட்ரோ ரயில் திட்டம் தற்போது வரை விருட்சமாவதைக் காண மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இன்றைய தினம், தமிழகத்திற்கு வருகை புரிந்து, சென்னை மெட்ரோவின் இரண்டாம் கட்ட திட்டத்தின் வடபழனி-பூந்தமல்லி வழித்தடத்தை துவக்கி வைத்துள்ள பிரதமர் மோடியை சென்னை விமான நிலையத்தில் மகிழ்ச்சியோடு வரவேற்றேன். இந்த திட்டத்தை பொறுத்தவரை, எனது தலைமையிலான அதிமுக அரசு இருந்தபோது, இதற்கான டிபிஆர் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் அனுமதி பெற்று, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவால் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.



மத்திய அரசின் நிதி வராத சூழலிலும், மாநில அரசின் நிதியை ஒதுக்கீடு செய்து, பணிகளை துவக்கிய அரசு அஇஅதிமுக அரசு. மேலும், பிரதமரை பலமுறை நான் நேரில் சந்தித்து இதற்கான நிதி குறித்து கோரிய நிலையில், மத்திய அரசும் நமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, ரூ.63,246 கோடி ஒதுக்க 2024-ம் ஆண்டு ஒப்புதல் அளித்தது.

அதன் அடிப்படையில் இன்றைய தினம், பூந்தமல்லி - வடபழனி வழித்தடம் மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. அதிமுக ஆட்சியில் நாம் விதைத்த விதைகள், தற்போது வரை விருட்சமாவதைக் காண மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.



தூத்துக்குடி எட்டையாபுரம் ரோடு அருகில் உள்ள சான்ஷான் கிரிக்கெட் அகாடமி சார்பில் பள்ளி மாணவர்களுக்கு இடையேயான 5 ஓவர் பாக்ஸ் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில் 14 அணிகள் கலந்து கொண்டன.போட்டியில் செயின்ட் ஆண்டனி பள்ளி அணி முதலிடம் பிடித்து சுழற்கோப்பையை வென்றது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தமிழக மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் சுழற்கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.நிகழ்ச்சியில் சான்ஷான்கிரிக்கெட்அகாடமிநிறுவனர்ரெனால்ட்,தூத்துக்குடிமாவட்டகிரிக்கெட்சங்கத்தலைவர்அல்பார்ட்முரளிதரன், செயலாளர் கிரிஸ்பின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம், உசிலம்பட்டி பேரவை அரங்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பேரையூர் வட்டம் இ.கோட்டைப்பட்டி கிராமத்தில் சமூக நீதித்துறையின் கீழ் ரூபாய் 92.78 லட்சம் மதிப்பீட்டில் 73 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார். உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.ம.விஜய் அவர்கள், மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர். தங்கப்பாண்டி அவர்கள், உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கர்ஷ் குமார் , ஆகியோர் உடன் உள்ளனர்.

## வடக்கன்குளம் எஸ்.ஏ.வி. பள்ளியில் பயிலும் 8ம் வகுப்பு மாணவன் ஆணி படுக்கையில் நின்றபடி இரண்டு விரல்களால் ஒரு மணி நேரம் கஞ்சிரா இசைக்கருவியை இசைத்து சாதனை



நெல்லை மாவட்டம், வடக்கன்குளம்எஸ்.ஏ.வி பாலகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 8-ம் வகுப்பு படிக்கும் மாணவர் மார்ஷல் செல்வசிங்.இவர் இசையின் மீதுள்ள ஆர்வத்தால் ஆணி படுக்கையில் நின்றவாறு தனது இரண்டு விரல்களைக் கொண்டுதொடர்ந்து ஒரு மணி நேரம் கஞ்சிரா இசைக்கருவியை இசைத்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார். பொதுவாக ஐந்து விரல்களின் உதவியுடன் வாசிக்கப்படும் கஞ்சிரா இசைக்கருவியை,இரண்டு விரல்களைக்கொண்டே வாசிப்பது மிகுந்த திறமையும் பயிற்சியும் தேவைப்படும் செயலாகும். இந்நிலையில்,மார்ஷல்செல்வசிங் தனது இரண்டு விரல்களைக் கொண்டு, ஆணிப் படுக்கையில் நின்றபடியே ஒரு மணி நேரம் கஞ்சிரா வாசித்து சாதனை முயற்சியை நிகழ்த்தியுள்ளார்.கஞ்சிரா இசைக்கருவியில் இதுவரை யாரும் உலக சாதனை படைக்காத நிலையில், இந்த மாணவர் நிகழ்த்தியுள்ள சாதனை முயற்சி இசை ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் கவனம் பெற்றுள்ளது. இருப்பினும்,

இது உலக சாதனையாக அதிகாரப்பூர்வமாகஅங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.இந்த மாணவருக்கு கஞ்சிரா வாசிப்புப் பயிற்சி அளித்தவர் டாக்டர் அப்துல் ஹலீம் ஆவார்.

மேலும், இதே நிகழ்வில் விகேஷ், பாலமுருகன், முபிஷ் பரத், பூவரசன்,தேவ்

ஸ்ரீ வருண், இஷாந்த் நட்ராஜ், மோனிஷ் யாஷ் வசின்,ஆரிஃப் இப்னு அப்துல் ஹலீம், அவினாஷ் மற்றும் ஷ்ர்வந்த் ஆகிய மாணவர்கள் பறை இசை வாசித்து தங்களது திறமையை வெளிப்படுத்தினர். மாணவர்களின் இசைத் திறமையையும்,விடாமுயற்சியையும்வெளிப்படுத்தும் இந்நிகழ்வு பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

## சித்தாமூர் அருகே கிராம சாலை அமைக்க எதிர்ப்பு தெரிவிக்கும்
## அ.தி.மு.க. கவுன்சிலர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி கிராம மக்கள் காவல் நிலையம் முற்றுகையிட்டு புகார் மனு



செங்கல்பட்டு மாவட்டம் சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இந்தளூர் கிராமத்தில் மாரியம்மன் கோவிலுக்கு செல்லக்கூடிய சாலை 15 வது நிதி குழு மானியத்தில் 2023-24 நிதியாண்டில் 110மீட்டர் தூரத்திற்கு சாலை அமைக்க 6லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து நான்கு ஆண்டுகள் ஆகியும் இந்த சிமெண்ட் சாலை அமைக்கும் பணி கடந்த நான்கு ஆண்டுகளாக இந்தளூர் அதிமுக கவுன்சிலர் தடுத்து நிறுத்தி வருகிறார். மேலும் இது குறித்து துறைசார்ந்தஅதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும் இந்நாள் வரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை

மேலும் இந்த சாலை அமைக்கும் பணி தடுத்து நிறுத்தும் இந்தளூர் அதிமுக கவுன்சிலர் கிரிஜா சிவா மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறி கிராம பொதுமக்கள் அச்சிறுப்பாக்கம்

காவல் நிலையத்தை முற்றுகையிட்டு காவல் நிலையத்தில் புகார் மனு வழங்கினர் இதனால் அப்பகுதியில் சற்று பரபரப்பு நிலவியது.

## மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட்ட திமுக வேட்பாளர் பரந்தாமன் தொகுதி மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் திமுக சார்பில் பரந்தாமன் போட்டியிட்டார் அவர் வெற்றி வாய்ப்பை இழந்தார்

தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்க இன்று மதுராந்தகம் பஜார் வீதியில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர்., நகர செயலாளர் குமார் கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் ஆகியோருடன் நடந்தே சென்று வாக்களித்த மக்களுக்கும் வாக்களிக்காத மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்

அப்பொழுது அவர் கூறுகையில் எனக்கு இந்த தொகுதியில் வாக்களித்த மக்களுக்கும் வாக்களிக்காத மக்களுக்கும் வாக்காளர்களுக்கும் திமுக வேட்பாளர் என்ற முறையில் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்

திமுக பல வெற்றி தோல்விகளை கண்டு எப்பொழுதும் மக்களுக்காக களப்பணி ஆற்றி வருகிறது மக்கள் பணியில் இன்றும் என்றும் திமுக வழுவாது திமுக எத்தனையோ சூறாவளியை பார்த்த இயக்கமாகும் பொது தேர்தல் என்றாலும் இடைத்தேர்தல் என்றாலும் எந்த தேர்தலாக இருந்தாலும் திமுக முடங்காது

தமிழக வெற்றி கழகம் என்பது அஸ்திவாரம் இல்லாத கட்சி இயக்கம் என்பது கூட சொல்லுகின்ற அளவிற்கு இது தரம் உயர்ந்து உள்ளதா என தெரியவில்லை

பொதுத் தேர்தல் சரிவை கண்டு ஓடி விடமாட்டோம் இதற்கு அடிப்படை காரணம் மக்கள் பணி தான் எந்த மக்கள் பணியும் செய்யாமல் மக்கள் பணி என்னவென்று தெரியாமல் பொது சேவை என்றால் என்னவென்று தெரியாமல் அதிர்ஷ்டத்தின் காரணமாக விபத்தின் காரணமாக நூறு இடங்களை பெற்று விட்டது அதனுடையநீலசாயம்வெளுக்கின்ற காலம் வெகு தொலைவில் இல்லை

மக்களிடமிருந்துதிமுகவை என்றும் பிரிக்க முடியாது நடந்து முடிந்த தேர்தலில் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம்எனஅமைச்சர் ஆதவ் அர்ஜனா அவர்கள் சவால் விட்டுச் சென்றார்

ஆளும் ஆட்சி பலம் பணபலம் அதிகார பலம் இவை யாவும் இருந்தும் ஒரு லட்சம் வாக்குகள் பெற தண்ணி குடித்து விட்டார்கள் திமுக அவர்களுக்கு பயத்தை காட்டி உள்ளது

ஐந்து நிமிடம் பிரச்சாரம் செய்தால் ஆகாயத்தை வில்லாய் வலைப்போம் எனவும் கொத்து பரோட்டா போடுவோம் என்றனர் ஆனால் மூன்று நாள் தொகுதியில் முட்டையிட்டு சென்று உள்ளார் முதல்வர்

மக்கள் சக்திக்கு முன்னால் யாரும் பெரிய ஆளே இல்லை மக்கள் தான் எஜமானர்கள் பிரச்சாரத்தின் போது முதலமைச்சர் டீ குடித்தார் விவசாய டிராக்டர் ஓட்டினார் ஆனால் முதல்வருக்கு டி என்ன விலை என்று தெரியாது விவசாய கடன் தள்ளுபடி செய்தோமா என்கின்ற எல்லாம் அவருக்கு தெரியாது

ஆகவே என்றும்திமுக மக்கள் பணியிலும் மக்களடனும் இருக்கின்ற 75 ஆண்டுகள் கடந்த கட்சி ஆகும் என இவ்வாறு கூறினார்.

## கோவை ஸ்ரீ சாய் கார்ஸ் நிறுவன ஆண்டு விழா மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அக்டோபர் 19ம் தேதி வரை நடைபெறும்
### ஏராளபான சிறப்புச் சலுகைகள் வழங்க இருப்பதாக நிர்வாக இயக்குநர் வினோத் தெரிவித்துள்ளார்

கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள ஸ்ரீ சாய் கார்ஸ் வளாகத்தில், ஸ்ரீ சாய் கார்ஸ் நிறுவனத்தின் ஆண்டு விழா மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பயன்படுத்தப்பட்ட கார் விற்பனை மேளா அக்டோபர் 10-ம் தேதி தொடங்கி 19-ம் தேதி வரை பத்து நாட்கள் நடைபெறுகிறது.



இந்த விற்பனை மேளாவில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் கார் விற்பனையாளர்களின் 300-க்கும் மேற்பட்ட பயன்படுத்தப்பட்ட கார்கள் ஒரே இடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சிறிய ரக கார்கள் முதல் உயர்தர கார்கள் வரை பல்வேறு வகையான கார்கள்,ரூ.50ஆயிரம் முதல் பல்வேறு விலைவரம்புகளில்விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளனகார் வாங்க விரும்பும் பொதுமக்கள் மற்றும் கார் பிரியர்கள் தங்களது தேவைக்கும், வரவு செலவுத் திட்டத்திற்கும் ஏற்ற கார்களை நேரில் பார்வையிட்டு தேர்வு செய்யும் வகையில் இந்த மேளா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயன்படுத்தப்பட்ட காரை மாற்றிக் கொள்ளும் வசதியும்,தங்களது காரை விற்பனைக்காகக் காட்சிப்படுத்தும் 'பார்க் அண்ட் செல்' வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், வாகன ஆவணங்களைச் சரிபார்த்தல், வங்கிக் கடன் பெறுவதற்கான உதவி உள்ளிட்ட சேவைகளும் வழங்கப்படுகின்றன. குறிப்பாக, தமிழகம் முழுவதும் இலவசமாக உரிமையாளர் பெயர் மாற்றம் செய்து தரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ சாய் கார்ஸ் ஆண்டு விழா மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நடைபெறும் இந்த விற்பனை மேளாவில், வாடிக்கையாளர்களுக்காக ஏராளமான சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட உள்ளதாக ஸ்ரீ சாய் கார்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வினோத் தெரிவித்துள்ளார். அக்டோபர் 19-ம் தேதி வரை நடைபெறும் இந்த மேளா குறித்த,மேலும் விவரங்களுக்கு: 7092920021 என்றஎண்ணில்தொடர்பு கொள்ளலாம்எனதெரிவித்துள்ளனர்

## "இதுவரை இப்படியொரு பிரதமரை தேசம் கண்டதில்லை" அபிஜித் திப்கே ட்வீட்

புதுடெல்லி: "இதுவரை இப்படியோரு பிரதமரை தேசம் கண்டதில்லை" என்று எக்ஸ் சமூக வலைதளத்தில் சிஜேபி நிறுவனர் அபிஜித் திப்கே, ட்வீட் செய்துள்ளார். நேற்று (அக்.10) டெல்லி போலீஸார் விமானத்துக்குள் அவரையும், சிஜேபி நிர்வாகிகள் சவுரவ் தாஸ், அசுதோஷ் ரங்கா ஆகியோரை கைது செய்தனர். இந்நிலையில், இன்று அவர்கள் மூவரையும் நிபந்தனையின் பேரில் நீதிமன்றம் விடுவித்தது. இந்நிலையில், விடுதலையான சில நிமிடங்களில் பிரதமர் மோடியை கடுமையாக விமர்சித்து அபிஜித் திப்கே ட்வீட் செய்துள்ளார். "பிரதமர் மோடி நாட்டுக்கு சங்கடமாக இருக்கிறார். இப்படியொரு கோழையை, அடாவடித்தனம் செய்பவரை இந்த தேசம் இதுவரை கண்டதில்லை.

சிஜேபி சார்பில் செய்தியாளர்களை டெல்லியில் சவுரவ் தாஸ் மற்றும் அசுதோஷ் சந்திப்பார்கள். சிஜேபி ஒருபோதும் பின்வாங்காது, அச்சுறுத்தலுக்கும் அஞ்சாது. அக்.10-ம் தேதி சர்வாதிகாரத்தின் முடிவின் தொடக்கமாக வரலாற்றில் இடம்பெறும்" என்று அந்த ட்வீட்டில் அவர் கூறியுள்ளார்.

தனது பாட்டியின் மறைவை அடுத்து பூர்விக கிராமத்துக்கு அபிஜித் திப்கே புறப்பட்டுள்ளார். அங்கு குடும்பத்தினருடன்அவர்துக்கத்தில் பங்கேற்கிறார். முன்னதாக,நேற்று காலை கைது செய்யப்படுவதற்கு முன்பு அவர் பதிவிட்ட ட்வீட்டில், "எங்கள் போராட்டம் தொடங்கும் முன்பு தனது தோல்வியை மோடி ஒப்புக்கொண்டுள்ளார். போராட்டத்தில் ஈடுபட முயல்பவர்களை ஒடுக்குவதும், டெல்லியை முடக்குவதும் வலிமையின் அறிகுறிகள் அல்ல. அதற்கு மாறாக சொந்த நாட்டு மக்களையே கண்டு அஞ்சும் ஒரு தலைவரின் நிலையை காட்டுகின்றன" என்று பதிவிட்டிருந்தார்.



தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி சனிக்கிழமை (அக்.10) அன்று டெல்லி ஜந்தர்மந்தரில்போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தது சிஜேபி.

இதில் பங்கேற்க மும்பையில் இருந்து அபிஜித் திப்கே, சவுரவ் தாஸ் மற்றும் அசுதோஷ் ரங்கா ஆகியோர் விமானத்தில் டெல்லி வந்தனர். அவர்களை விமானத்துக்குள் டெல்லி போலீஸார் கைது செய்தனர்.இந்தச்- தனது பாட்டியின் மறைவை அடுத்து பூர்விக கிராமத்துக்கு அபிஜித் திப்கே புறப்பட்டுள்ளார். அங்கு குடும்பத்தினருடன் அவர் துக்கத்தில் பங்கேற்கிறார். சூழலில் இன்று அவர்களை விடுத்துள்ளார் டெல்லி சிறப்பு மாஜிஸ்திரேட்.



### மகாராஜா அகர்சேன் 5150வது பிறந்தநாள்:

## ஈரோடு அரசு மருத்துவமனையில் ஸ்ரீ அகர்வால் சங்கம் சார்பில் பழங்கள், பிஸ்கட் வழங்கி நலத்திட்ட உதவி

ஈரோடு ஸ்ரீ அகர்வால் சங்கம் சார்பாக மகாராஜா அகர்சேன் அவர்களின் 5150-வது பிறந்த நாளை முன்னிட்டு, ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வரும் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு பழங்கள் மற்றும் பிஸ்கட் வழங்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து சங்க நிர்வாகிகள் மகாராஜா அகர்சேன் அவர்களின் சிறப்புகளைப் பற்றிக் கூறுகையில், "அனைவருக்கும் உதவும் பெருங்குணம் கொண்ட மகாராஜா அகர்சேன் அவர்கள், ஏழை எளிய மக்களின் பசி போக்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தார். குறிப்பாக, எளிய மக்கள் வீடு கட்டத் தொடங்கும்போது, முதல் செங்கல்லும் ஒரு ரூபாய் நாணயமும் வழங்கி வாழ்த்தி, அவர்களின் வாழ்வாதாரத்திற்கு அடித்தளமிட்டு ஆசீர்வதிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தவர்" என்று நினைவுகூர்ந்தனர்.

மேலும், ஈரோடு மாநகர் பகுதியில் சுமார் 150 குடும்பங்களைச் சேர்ந்த 600-க்கும் மேற்பட்டோர் ஸ்ரீ அகர்வால் சங்கத்தில் அங்கம் வகித்து வருவதாகவும், மகாராஜா அகர்சேனின் வழியில் நின்று ஏழை எளிய மக்களுக்கான பல்வேறு சமூக நலத்திட்டப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகவும் நிர்வாகிகள் தெரிவித்தனர். இந்நிகழ்வில் முன்னாள் மாமன்ற உறுப்பினர் விஜயபாஸ்கர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். ஈரோடு ஸ்ரீ அகர்வால் சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

### பிஎஸ்ஜி நிறுவனத்தின் நூற்றாண்டு விழா, கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக

## 17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மாவட்ட அளவிலான கால்பந்து போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கும் விழா



கோவையில் பிஎஸ்ஜி நிறுவனத்தின் நூற்றாண்டு விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இதனை தொடர்ந்து பிஎஸ்ஜி கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற, 17 வயதுக்குட்பட்ட ஆண்கள், மற்றும் பெண்களுக்கான மாவட்ட அளவிலான கால்பந்து போட்டிகள் கடந்த 06ம் தேதி முதல் 09ம் தேதி வரை நடைபெற்று வந்தது.

இம்மாவட்ட அளவிலான போட்டியில் 14 ஆண்கள் அணிகளும்,13 பெண்கள் அணிகளும் பங்கேற்று தங்களது விளையாட்டுத் திறன், ஒற்றுமை, கட்டுப்பாடு மற்றும் விளையாட்டு உணர்வை வெளிப்படுத்தினர்.

போட்டியின் நிறைவு விழாவை தொடர்ந்து இன்று, பிஎஸ்ஜி மெட்ரிக்குலேசன் பள்ளி வளாகத்தில் பரிசளிப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக, தமிழ்நாடு மின்வாரிய உதவி நிர்வாகஅலுவலர் அனில்குமார், மற்றும் கால்பந்து நடுவர், ஸ்ரீகிருஷ்ணா, ஆகியோர் கலந்துகொண்டுமாணவ மாணவியர்களின் விளையாட்டு திறனை வாழ்த்தி சிறப்புரையாற்றினர். இவ்விழாவில் பிஎஸ்ஜி பள்ளிகளின் செயலாளர் நந்தகோபாலன் மற்றும்பிஎஸ்ஜிமெட்ரிக்குலேசன் பள்ளியின் முதல்வர் காயத்ரி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு விருந்தினர்களை வரவேற்றனர். தொடர்ந்து விழாவின் முக்கிய நிகழ்வாக வெற்றி பெற்ற அணிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் ஆண்களுக்கான முதல் பரிசை திருப்பூர் ஸ்ரீ சக்தி இன்டர்நேஷனல் பள்ளி பிடித்ததுடன், 20,000 ரூபாய்ரொக்கபரிசையும் வென்றது. இரண்டாம் பரிசை ஈரோடு இராஜேந்திர மெட்ரிக்குலேசன் பள்ளி பிடித்ததுடன் 10,000 ரூபாய் பணத்தையும்தட்டி சென்றது. இதே போல

மேலும் சிறப்பாக பெண்கள் அணியில் முதல் பரிசை உடுமலைப்பேட்டை என்.வி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியும், இரண்டாம் பரிசை கோவை மணி மேல்நிலை பள்ளியும் தட்டி சென்றது. சிறப்பாக விளையாடிய வீரர்களுக்குத் தனிநபர் கோப்பைகள், குழுவாக திறமைகளை வெளிபடுத்திய அணிகளுக்குக் கோப்பைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது

இறுதியாக நடைபெற்ற நன்றியுரையில், சிறப்பு விருந்தினர்கள்,பிஎஸ்ஜி நிர்வாகம், பள்ளி நிர்வாகம், போட்டி ஏற்பாட்டாளர்கள், நடுவர்கள், பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் விழா சிறப்பாக நடைபெற உதவிய அனைவருக்கும் நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.

நான்கு நாட்கள் நடைபெற்ற இப்போட்டி, மாணவர்களின் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், குழு ஒற்றுமை, ஒழுக்கம், தலைமைத்துவம், விடாமுயற்சி மற்றும் விளையாட்டு நற்பண்புகளை வளர்க்கும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது. பிஎஸ்ஜி நூற்றாண்டு விழாவின் முக்கியநிகழ்வுகளில் ஒன்றாக இப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் அமைந்தது.

## தமிழ்நாடு - கேரள நட்புறவை மேலும் வலுப்படுத்த வேண்டும்; ஈரோட்டில் நடந்த ஓணம் விழாவில் அமைச்சர் விஜய் பாலாஜி வலியுறுத்தல்



தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கு இடையேநீண்டகாலமாக நிலவி வரும் நட்புறவு, நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர ஒற்றுமையை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி வலியுறுத்தினார்.

ஈரோடு கொங்கு திருமண மண்டபத்தில் கேரள சமாஜம் சார்பில் நடைபெற்ற ஓணக் கொண்டாட்ட விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் பேசினார்.

அப்போது, தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கு இடையே நீண்டகாலமாக நல்லுறவு நிலவி வருவதாகக் குறிப்பிட்ட அவர், இரு மாநில மக்களிடையே உள்ள நட்புறவையும் நல்லிணக்கத்தையும் தொடர்ந்து பேணிப் பாதுகாத்து, மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

ஓணக்கொண்டாட்ட விழாவில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவின் ஒரு பகுதியாக, பள்ளித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்றமாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஈரோடு மேற்கு சட்டமன்றத்தொகுதி உறுப்பினர் ஆனந்தமோகன், கேரள சமாஜ நிர்வாகிகள் பிரசாந்த், குமார் மோகன், ரவிச்சந்திரன், கிஷோர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் போற்றும் ஓணத் திருவிழா, இரு மாநில மக்களிடையே நிலவும் நட்புறவு மற்றும் ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## பனை மரங்களின் பயன்பாடுகள் குறித்து இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்

### பாடப்புத்தகங்களில் பனை மரங்களின் நன்மைகளைச் சேர்க்க வேண்டும் - சௌமியா அன்புமணி எம்.எல்.ஏ. வலியுறுத்தல்!





ஈரோடு மாவட்டம்,கங்காபுரம் டெக்ஸ்வேலியில் நடைபெற்ற பனை & இயற்கை மக்கள் திருவிழா – 2026 நிகழ்ச்சியில், பசுமைத் தாயகம் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான சௌமியா அன்புமணி சிறப்பு அழைப்பாளராகக்கலந்து கொண்டு, பனை மரங்களின் பயன்கள் குறித்து இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

நிகழ்ச்சியில்சௌமியா அன்புமணி பேசியதாவது:

பனை மரங்கள் வறட்சியிலும் வளரக்கூடிய தன்மை கொண்டவை. இம்மரங்களை வளர்ப்பதற்கு அதிக அளவிலான உரங்கள் தேவையில்லை. இயற்கையோடு இணைந்து வளரும்பனை மரங்கள் நமது பாரம்பரியத்தின் அடையாளமாகத் திகழ்கின்றன.

தென்னை மரங்கள், வாழை மரங்கள் உள்ளிட்ட மரங்களைப் பற்றி அறிந்துள்ள இன்றைய இளைய தலைமுறையினருக்கு, பனை மரங்களின் சிறப்புகள் மற்றும் பயன்பாடுகள் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லை.

பனை மரத்திலிருந்து கிடைக்கும் பனம்பழம், நுங்கு, பனங்கிழங்கு உள்ளிட்ட பொருட்கள் உணவுப் பயன்பாட்டில் முக்கிய இடம் பெறுகின்றன. அவற்றின் ஊட்டச்சத்துகள் மற்றும்பாரம்பரியப் பயன்பாடுகள் குறித்து அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டும்.

பனை மரங்களின் பயன்களை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்ல வேண்டும். இதற்காகப் பனை மரங்களின் நன்மைகள் மற்றும் பயன்பாடுகள் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பள்ளிப் பாடப்புத்தகங்களில் உரிய தகவல்களைச் சேர்க்க வேண்டும். மேலும்,பனை மரங்களை வளர்ப்பதற்கும் பாதுகாப்பதற்கும் இளைய தலைமுறையினரை ஊக்குவிக்க வேண்டும்."

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக, சௌமியா அன்புமணி, பனைப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட உணவுப்பொருட்கள், பனை ஓலைகளால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்கள் மற்றும் பாரம்பரியப் பொருட்கள் இடம்பெற்றிருந்த கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டார். பனை சார்ந்த உற்பத்திப் பொருட்களின் வகைகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் பார்வையிட்டார்.

ஈரோடு மாவட்டம் கங்காபுரம் டெக்ஸ்வேலியில் நடைபெற்ற பனை & இயற்கை மக்கள் திருவிழா – 2026, இரண்டு நாள் நிகழ்ச்சியாக நடைபெற்றது. முதல் நாள் நிகழ்ச்சியில் அமைச்சர் ம. விஜய் பாலாஜி கண்காட்சியைத் திறந்து வைத்தார். தொடர்ந்து, பனைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்தார்.இந்தக்கண்காட்சியில் பனை ஓலைக் கைவினைப் பொருட்கள், பனைகருப்பட்டிதயாரிக்கும் நேரடி செயல்விளக்கம்,கைத்தறி நெசவு,களிமண் பானைகள் தயாரித்தல், மரத்தாலான விளையாட்டுப் பொருட்கள் மற்றும் பாரம்பரிய உபகரணங்கள் இடம்பெற்றன.

மேலும், பாரம்பரிய அரிசி வகைகள், சிறுதானியங்கள், இயற்கை உணவுப் பொருட்கள், நுங்குப் பால், நுங்கு ஐஸ்கிரீம், பனை கருப்பட்டி, பனை சர்க்கரை உள்ளிட்ட பொருட்கள் விற்பனைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டன.

இயற்கை விவசாயம், நாட்டுக் காய்கறி விதைகள், இயற்கை உரங்கள், வீட்டுக் கழிவுகளை உரமாக்குதல், மறுசுழற்சி மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கைமுறை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.குழந்தைகள் நேரடியாகக் களிமண் பானைகள் மற்றும்கைவினைப்பொருட்களைத் தயாரித்துப் பயிற்சி பெறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இந்நிகழ்ச்சியில் சக்தி மசாலா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்கள் பி.சி. துரைசாமி, சாந்தி துரைசாமி, டெக்ஸ்வேலி செயல் இயக்குநர் குமார், ஈரோடு மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். ராஜு, தலைவர் பிரபு, மணிகண்டன் மற்றும் பனை இயற்கைத் திருவிழா நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த சிறு உற்பத்தியாளர்கள், கிராமப்புறத் தொழில்முனைவோர், பெண்கள் சுயஉதவிக் குழுவினர்மற்றும்கைவினைக் கலைஞர்கள் தங்களது தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தினர். பொதுமக்கள் குடும்பத்துடன் வருகை தந்து கண்காட்சியைப் பார்வையிட்டு, பாரம்பரிய உணவுப் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்களை ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர். பனை வளர்ப்போம்! பாரம்பரியம் காப்போம்! இயற்கையோடு இணைவோம்! பனை மரங்களின் பொருளாதாரப் பயன்கள், பாரம்பரிய உணவுப் பயன்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் நடைபெற்ற இத்திருவிழா, பனை சார்ந்த தொழில்களை ஊக்குவிப்பதற்கும் இயற்கை வாழ்வியலை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதற்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வாக அமைந்தது.

## Riyadh airport ops halted, Houthis' fresh warning: Major escalation after latest strike kills 12 in Saudi



*Flight operations at Riyadh airport in Saudi Arabia reportedly remained suspended on Sunday after a deadly Houthi strike killed 12 and left over 300 injured on Saturday. The halt will continue until further notice, news agency AFP reported, citing sources.*

*"Riyadh airport has suspended operations again today. They informed us of this at dawn," a senior official was quoted as saying by AFP.*

*The report, citing sources, said that radar and communications equipment have been damaged, while the runways also needed to be assessed, following Saturday's Houthi offensive at Riyadh airport.*

*Airtraffic monitor Flightradar24 noted the suspension, saying "the closure of Riyadh Airport has been extended by another 24 hours, until 21:00 UTC today", in a statement posted on X.*

*Major escalation in Saudi-Houthi fighting*

*The latest Houthi attack at Riyadh airport was the second one within a span of two days. On Thursday, three people were killed after the Houthis targeted King Khalid International Airport and a Saudia Airlines aircraft in Riyadh.*

*Among those killed was a pilot with the national airline, identified as Hamoud Ali Alkalthami. Several others of "different nationalities" were injured in the attacks, the kingdom's civil aviation authority said.*

*On Saturday, the Houthis once again targeted the airport, marking a major escalation in the conflict after 12 people were killed. US President Donald Trump said he was considering whether to join Saudi strikes against the Houthis. "We may. We're going to look at it. We just found out about the recent attack, so we'll make a decision," he told reporters at the White House.*

*If the US intervenes, the Houthis could halt shipping through a crucial waterway and further restrict the flow of oil out of the Persian Gulf, causing a major energy crisis coupled with Hormuz stalemate. Houthi blames Saudi for fresh airstrikesThe Houthis reportedly said that two airstrikes targeted Yemen's capital, Sanaa, and blamed Saudi Arabia, the Associated Press reported.*

*The Houthi-run Health Ministry has said that 91 Yemenis have been killed and 168 injured by the Saudi-led coalition in five weeks. It said that 60% of those killed were women and children.*

*Saudi airports are on the target list of Houthi attacks, the group has reportedly said, with its military spokesman Brig. Gen. Yahya Saree urging "everyone to take our warnings seriously."*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.